No. of Printed Pages : 7

**8375**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# பகுதி - III — சிறப்புத் தமிழ்
# Part - III — ADVANCED LANGUAGE — TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** சரியானத் தொடரைக் கண்டறிக.

(அ) கவிதையில் உரிப்பொருள் இன்றியமையாதது

(ஆ) கவிதையில் முதற்பொருள் இன்றியமையாதது

(இ) கவிதையில் கருப்பொருள் இன்றியமையாதது

(ஈ) கவிதையில் மையப்பொருள் இன்றியமையாதது

**2.** 'தாமிருந்த கோடு குறைத்து விடல்' - இப்பழமொழியின் பொருள் :

(அ) தான் தங்கியிருக்கும் கிளையை வெட்டி தானும் வீழ்ந்து உயிர் விடல்

(ஆ) தன் வீட்டிலுள்ள சுற்றத்தாரை வெளியேற்றிவிடுதல்

(இ) தன் எதிரிகளைக் குறைத்து மதிப்பிடல்

(ஈ) தான் தங்கியிருக்கும் வீட்டின் உயரத்தைக் குறைத்தல்

[ திருப்புக

3. உழவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் சிற்றிலக்கிய வகை :

(அ) பரணி (ஆ) அந்தாதி

(இ) கலம்பகம் (ஈ) பள்ளு

4. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.

(1) கதாபாத்திரம், தனது எண்ண ஓட்டங்களாகக் கதை நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும் வடிவத்தில் கதை அமைவது, நனவோடை முறை.

(2) புதினம், வாழ்வின் ஒரு துளியை, ஒரு புள்ளியை, ஒரு தரப்பை மட்டும் சொல்ல வந்த வடிவம்.

(3) உறுதியான கதைமாந்தர் அடையும் மாற்றமே, புதினத்திற்கு இலக்கியத் தன்மையைத் தருகிறது.

(4) ஒரு புதினம், அதன் வாசிப்பின் பயனாக வாசகனுக்கு ஓர் ஒட்டுமொத்த பார்வையை அளிக்க வேண்டுவதில்லை.

(அ) (1), (3) சரியானவை (ஆ) (2), (3) சரியானவை

(இ) (1), (4) சரியானவை (ஈ) (3), (4) சரியானவை

5. கதையின் போக்கில் எதிர்காலக் கற்பனைகள் விவரிக்கப்படுவது :

(அ) நனவோடை முறை (ஆ) முன்னோக்கு முறை

(இ) காட்சித்துணுக்கு முறை (ஈ) பின்னோக்கு முறை

6. பொருந்தும் இணையைக் கண்டறிக.

(அ) கல்மரம் - ஹெப்சிபா ஜேசுதாசன்

(ஆ) சாயாவனம் - திலகவதி

(இ) புத்தம்வீடு - சா. கந்தசாமி

(ஈ) மாறுதல் - அசோகமித்திரன்

7. திரைப்படத்தின் உயிர் எனக் கருதப்படுவது :

(அ) இயக்கம் (ஆ) கதை

(இ) இசை (ஈ) வசனம்

8. 'நாடகவியல்' என்னும் நூலின் ஆசிரியர் ____________.

(அ) பம்மல் சம்பந்தனார் (ஆ) சங்கரதாச சுவாமிகள்

(இ) மதுரகவி பாஸ்கரதாஸ் (ஈ) பரிதிமாற்கலைஞர்

9. கட்டைக்கூத்து என்று அழைக்கப்படும் கலை :

(அ) தெருக்கூத்து (ஆ) ஒயிலாட்டம்

(இ) தோல்பாவைக் கூத்து (ஈ) மரக்கால் ஆட்டம்

10. 'பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டார் கல்வி அலுவலர்' - இத்தொடரில், வினைமுற்று எங்கு இடம் பெற்றுள்ளது ?

(அ) தொடரின் இறுதியில் (ஆ) தொடரின் முதலில்

(இ) தொடரில் இடம்பெறவில்லை (ஈ) தொடரின் இடையில்

11. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள இணைக்குரிய விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

| | |
|---|---|
| (அ) (ஆடு + ஐ) ஆட்டை- ஆடை | (1) சொல் இணைப்புச் சூழல் |
| (ஆ) வைகை - வை கை | (2) உருபன் இணைப்புச் சூழல் |
| (இ) மலைக்குகை - மலை வாழை | (3) ஒலிச்சூழல் |
| (ஈ) நூலைப்படி - ஏணிப் படி | (4) இலக்கணச் சூழல் |

12. ''இலக்கியம் சிறந்ததா அல்லது குறையுடையதா என்பதைக் காண்பதே திறனாய்வு'' என்று கூறியவர் :

(அ) விக்டர் யூகோ (ஆ) மேத்யூ ஆர்னால்டு

(இ) ஸ்பிங்கான் (ஈ) சி.டி. வின்செஸ்டர்

13. சித்திரிப்பு என்னும் சொல்லடியாகத் தோன்றிய சொல் :

(அ) வானொலி உரைச்சித்திரம் (ஆ) உரைச்சித்திரம்

(இ) தொலைக்காட்சி உரைச்சித்திரம் (ஈ) சித்திரம்

14. ''அவன் **வந்து பார்த்துச்** சென்றான்'' - இத்தொடரில் தடித்த எழுத்துகளில் இடம் பெற்றுள்ளவை :

(அ) முற்றெச்சங்கள் (ஆ) பெயரெச்சங்கள்

(இ) வினையெச்சங்கள் (ஈ) வினைமுற்றுகள்

[ திருப்புக

15. சரியான இணையைக் கண்டறிக.

(1) மார்கோனி - வானொலி

(2) ஜான் லெகி பெயர்டு - அலைபேசி

(3) ஆம்பெக்ஸ் நிறுவனம் - ஒளிப்பதிவு நாடா

(4) பெர்டினாண்ட் பிரவுன் - இணையம்

(அ) (1), (3) சரி, (2), (4) தவறு (ஆ) (1), (2), (3) சரி, (4) தவறு

(இ) (2), (3) சரி, (1), (4) தவறு (ஈ) (2), (3), (4) சரி, (1) தவறு

16. பாலராமாயணம் என்ற வானொலி நிகழ்ச்சிக்கு இசை அமைத்தவர் :

(அ) மல்லிக் (ஆ) டி.கே. பட்டம்மாள்

(இ) முத்துக்கூத்தன் (ஈ) எஸ். ராஜம்

17. ஓர் எழுத்தையோ, கலைப் படைப்பையோ, வணிகப் பொருளைப் பற்றிய கருத்துகளையோ தீர்மானிப்பது ____________.

(அ) தகவல் பெறுவி (ஆ) உரையாடு இயலி

(இ) பனுவல் சுருக்கம் (ஈ) உணர்வுப் பகுப்பாய்வி

18. இது மொழியியலும் கணினி அறிவியலும் இணைந்தது :

(அ) மொழி அறிவியல் (ஆ) கணினி மொழியியல்

(இ) கணினிப் பொறியியல் (ஈ) பயன்பாட்டு மொழியியல்

19. தமிழை உருபனியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது சற்று கடினமான செயல், ஏனெனில் அது :

(அ) பிரிநிலை மொழி (ஆ) கூட்டுநிலை மொழி

(இ) தனிநிலை மொழி (ஈ) ஒட்டுநிலை மொழி

**20.** பொருத்துக :-

| | | | |
|---|---|---|---|
| (1) | விரிதாள் | (i) | அலுவலகப் பயன்பாடு |
| (2) | தரவுத்தளம் | (ii) | வரவு செலவுக் கணக்கு |
| (3) | சொல்செயலி | (iii) | ஐ ஓ எஸ் |
| (4) | ஆப்பிள் | (iv) | ஆவணத் தயாரிப்பு |

(அ) (1) - (i), (2) - (iv), (3) - (iii), (4) - (ii)

(ஆ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஈ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

## பகுதி - II

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **7x2=14**
வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும்.

**21.** முக்குற்றங்கள் என பௌத்தம் குறிப்பிடுவன யாவை ?

**22.** மணிமொழிக் கோவை என்பதில் அமைந்த நூல்கள் யாவை ?

**23.** முதன்மையான புனைகதை கலைக் கூறுகள் யாவை ?

**24.** இலட்சியவாத புதினங்களுள் எவையேனும் இரண்டை எழுதுக.

**25.** ஒருவரிக் கதை என்றால் என்ன ?

**26.** மொழி ஒப்பாய்வின் இன்றியமையாமையைப் புலப்படுத்துக.

**27.** கருவிசார் கலைகள் எவை எவை ?

**28.** தமிழின் தொன்மைச் சிறப்புக்குச் சான்றுகள் இரண்டு தருக.

**29.** அண்மைக் காட்சி என்றால் என்ன ?

**30.** திறன்பேசி என்றால் என்ன ?

[ திருப்புக

## பகுதி - III

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**31.** அன்றாட செயல்களை எவ்வாறு தொடங்க வேண்டும் என ஆசாரக்கோவைப் பாடல் கூறுகிறது ?

**32.** ஓரையாடுதல் - குறிப்பு வரைக.

**33.** புதினத்தில் உரையாடலின் பங்கினை விளக்குக.

**34.** மண்ணோடு மனிதன் நிகழ்த்தும் போராட்டம் எத்தகையது என சா. கந்தசாமி விவரிக்கிறார் ?

**35.** வியல்-வியர்-வேர் விளக்குக.

**36.** நவீன நாடகக் குழுக்களுள் எவையேனும் மூன்றை எழுதுக.

**37.** காட்சி என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

**38.** திறனாய்வு என்பதற்கு மேத்யூ ஆர்னால்டு தரும் விளக்கம் யாது ?

**39.** இ-பப் அமைப்பில் சேர்க்கப்பட்ட சிறப்பான வசதிகள் மூன்றைச் சுட்டுக.

**40.** தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பிற்கான நெறிமுறைகள் குறித்து எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**41.** (அ) சிலப்பதிகாரக் காப்பியம் குறித்து நீ அறிந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) தமிழ் கவிதையின் போக்குகள் குறித்து விவரிக்கவும்.

**42.** (அ) புதினங்களில் நவீனம் - தற்காலம் குறித்து விவரித்து எழுதுக.

**அல்லது**

(ஆ) புழை-புழல்-புடல்-புடலங்காய் சொல்லுருவாக்கம் குறித்து விவரித்து எழுதுக.

**43.** (அ) தாய் புதினத்தின் வழியே ''நதாஷா'' கதாபாத்திரத்தை விளக்குக.

**அல்லது**

(ஆ) தமிழ்த் திரைப்பட வரலாறு பற்றி நீவிர் அறிவன யாவை ?

**44.** (அ) பாடல்சார் கலைகள் என்றால் என்ன ? பாடல்சார் கலைகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி விவரித்து எழுதுக.

**அல்லது**

(ஆ) தமிழ், பிற திராவிட மொழிகளுடன் வேர்ச்சொல் ஆய்வில் எவ்வாறு பொருந்தியுள்ளது ? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**45.** (அ) திறனாய்வு அணுகுமுறைகளுள் எவையேனும் இரண்டைப் பற்றி விரிவாக எழுதுக.

**அல்லது**

(ஆ) சொற்பொருள் மாற்றத்தால் ஏற்படும் பயன்கள் யாவை ?

**46.** (அ) தென்கச்சி கோ. சுவாமிநாதன் அவர்களின் வானொலி உரையினை மதிப்பிடுக.

**அல்லது**

(ஆ) ஊடகச் சட்டங்களுள் எவையேனும் ஐந்து சட்டங்கள் குறித்து எழுதுக.

**47.** (அ) மைதிலி கவிதைத் திருவிழா நிகழ்வையும் தீரா செய்த மைதிலி, தமிழ்க் கவிதை ஒப்பீட்டையும் விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) தொடரியல் பகுப்பாய்வி செயல்படும் விதத்தைச் சான்றுடன் விளக்குக.

**- o 0 o -**